மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள்.*

திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது இராணிப்பேட்டையைவிட ஆம்பூரில்தான் அதிகமாக தோல் தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். தோல் தொழிற்சாலையின் பிறப்பிடமே இராணிப்பேட்டைதான். ஆம்பூரில் வேண்டுமானால், ஆடு மற்றும் செம்மறியாடு தோல் சம்பந்தமான தொழில்கள் நடைபெறுகின்றன. ஆனால், இராணிப்பேட்டையில் மாட்டுத் தோலைப் பக்குவப்படுத்தி, அந்தத் தோல்மூலம் shoe தயாரிக்கப்பட்டு, அதிக அளவில் விற்பனை நடைபெறுகின்றன. எந்தவிதத்திலும் இராணிப்பேட்டை ஆம்பூருக்குச் சளைத்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் வாலாஜாபேட்டையைத் தேர்ந்தெடுத்து, அங்கு தொழில் பூங்காவை அமைக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை தயாரித்தது மிகவும் சாலச் சிறந்தது. அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்தரப் பிரதேசத்தைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எந்தத் தொழிலைத் தொடங்கினாலும், 25 சதவீதம் DIC - District Industries Centre மூலம் மானியம் அளித்துக் கொண்டிருக்கின்றது. அது தோல் தொழிற்சாலைகளுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கின்றது. இராணிப்பேட்டையில் மிகப் பெரிய தோல் தொழிற்சாலைகளும், Shoe site-களும் ஆம்பூரைவிட அதிகமாக உள்ளன என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 307, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

307—

சொந்தக் கட்டடம்

***47163—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110—ன்கீழ், போக்குவரத்துத் துறைக்கு 253 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் 1,200 புதிய பேருந்துகள், விபத்து இழப்பீட்டுக்கு 39 கோடியே 73 இலட்சம் ரூபாய் நிதி, 16 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 சிற்றுந்துகள், 4 பகுதி அலுவலகங்கள், 2 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் அறிவித்த காலத்தின் கடும் தவத்தில் காவியமாய் கிடைத்தவரே! இழுக்குகளை, அலைக்கற்றை அழுக்குகளைத் துடைத்தெறிய வந்த அரசியல் பூங்காற்றே! (மேசையைத் தட்டும் ஒலி) ஒளியிழந்த தமிழ் மண்ணுக்கு ஒளி தந்த முழுமதியே! தன் பிறப்பால் தமிழ் இனத்தை தலை நிமிர்த்தும் சிகரமே! உலகத் தமிழினமே கைகூப்பி வணங்கும் மூலவரே! மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத் தளம் கட்ட கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடையில் புல எண்கள் 305/2 மற்றும் 338/4—ல் சுமார் 2.50 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்து வழங்கும்படி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிலம் போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வுத் தளம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெருங்காப்பியமாம் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் பெயரிலே விருது வழங்கிட ஆணையிட்டு, தொன்மையான தமிழர்களின் பெருமையையும், தமிழறிஞர்களையும் காத்து தமிழர்கள் வாழ்வில் தலைநிமிர்ந்திட அனுதினமும் உழைத்திடும் எங்கள் தமிழ் அன்னையை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மேட்டுப்பாளையம் நகரத்திலே அமைந்திருக்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் வாகனங்களை உள்ளடக்கி, ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் புதிய வாகனங்களைப் பதிவு செய்து வருகிறது. இந்த நிலையில், நீண்டநெடுங்காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிற அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குத் தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டு, வெகு விரைவிலே அங்கே வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், ஓட்டுநர் தேர்வுத் தளமும் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருப்பதற்கு வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 308, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

308—

ஆவின் பாலகம்

***35326—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—